


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (14.10.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம். பாபு ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டம் – பண்ருட்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

## 'பள்ளமில்லாச் சாலைகள்' – 'பாதுகாப்பான பயணம்' என்ற

# முதல்வரின் இலக்கை நோக்கிப் பயணிப்போம்!

## நெடுஞ்சாலைத்துறை ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் எ.வ.வேலு வேண்டுகோள்!

**சென்னை, அக். 15-**

**வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து, சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலை ஆணைய கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு நேற்று முன்தினம் மேற்கொண்டார்.**

இக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

அவசரமாக, உங்களை அழைத்து ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று, எண்ணியதற்கு முக்கிய காரணம் என்னவென்று சொன்னால், இந்த துறையின் பணிகள் விரைந்து மேற்கொண்டு, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு எவ்விதத்திலும், அரசுக்குத் திருப்பி செலுத்தாத வகையில், பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நெடுஞ்சாலைத்துறைக்கு அரசு ரூ.17,709 கோடி அளவில் நடப்பாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திட்டப் பணிகளை பொருத்தவரை, மற்ற துறைகளைவிட நெடுஞ்சாலைத்துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது மிகவும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

**நெடுஞ்சாலைத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு ஏன்?**

காரணம் அரசுக்கு செலவு செய்கின்றபோது (Capital Expenditure) அதாவது மூலதனச் செலவு. அப்படி மூலதனச் செலவு செய்வதிலே முதலிடத்தில் இருப்பது நெடுஞ்சாலைத்துறையும், பொதுப்பணித்துறையும். ஆனால், முழுமையாக நெடுஞ்சாலை துறைக்கு, அரசு அதிகமாக பணம் ஒதுக்கீடு செய்வதற்கு இன்னொரு காரணம், என்னவென்றால், Capital Expenditure அதிகமாக இருக்கிற காரணத்தால் தான், நிதி அதிகமாக ஒதுக்கீடு செய்கிறது அரசு.

நிதியை மட்டும் அதிகமாக ஒதுக்கீடு செய்து என்ன பயன்? செலவு செய்து ஆகவேண்டுமல்லவா? அதை விரைந்து செய்யவில்லை என்பது அவர்கள், நம் மீது சொல்லுகின்ற ஒரு குற்றச்சாட்டு. ஆனால் கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் 100% செலவினம் மேற்கொள்ளப்படுகிறதா என்றால் இல்லை.

எனவே, இந்த ஆண்டு முழுமை யாகவே செலவு செய்து விட்டு, நிதி இல்லை என்று கேட்டாலே தவறு இல்லை என்று அமைச்சர் எடுத்துரைத்தார்கள்.

தற்போது, நெடுஞ்சாலைத்துறையில் நிலுவை பணிகளின் மதிப்பு ரூ.26,305 ஆயிரம் கோடி ஆகும். நடப்பாண்டில் ரூ.13,667 கோடி அளவிற்கு புதிய பணிகளுக்கு நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ரூ.40 ஆயிரம் கோடி பணிகள் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ளன.



வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து, சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலை ஆணைய கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த இந்த ஆய்வுக் கூட்டத்தில், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டபொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மொத்த செலவினத்தையும் பிப்ரவரி மற்றும் மார்ச்சில் மேற்கொள்ளலாம் என்ற எண்ணத்தை கைவிட்டு, திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இம்மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 20% குறைவில்லாமல் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அனைத்து தலைமை பொறியாளர்களும், கண்காணிப்பு பொறியாளர்களும், கோட்ட பொறியாளர்களும் இலக்கு நிர்ணயித்துக் கொண்டு, செயலாற்ற வேண்டும் என்று கூறினார்.

குறிப்பாக, கண்காணிப்புப் பொறியாளர்கள் 20% செலவினம் செய்யப்படுகிறதா என்பதை கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், தலைமைப் பொறியாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**'நம்ம சாலை' செயலி புதிய வடிவத்துடன் விரிவாக்கம்!**

"பள்ளமில்லா சாலைகள்", "பாதுகாப்பான பயணம்", "விபத்தில்லா தமிழ்நாடு" என்ற இலக்கை நோக்கி நெடுஞ்சாலைத்துறையை வழிநடத்திச் செல்வதே முதலமைச்சரின் கனவாகும். பள்ளம் இல்லா சாலைகளை உருவாக்கும் விதமாக "நம்ம சாலை" என்ற செயலியைதுணை முதலமைச்சர் அவர்களை கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த செயலி சிறப்பாக செயல்படுவதால், இதன் பயன்பாட்டை சென்னை பெருநகரம், அனைத்து மாநகராட்சிகள், ஊரக வளர்ச்சித் துறை, தேசிய நெடுஞ்சாலை மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் போன்ற பிற துறைகளுக்கும் இச்செயலியின் பயன்பாட்டை விரிவுபடுத்த இந்த அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. விரைவில் நம்ம சாலை செயலி புதிய வடிவத்துடன் முதலமைச்சர் அவர்களால் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது என்றும் தெரிவித்தார்.

நம்ம சாலை செயலியில் இந்த மாதம் 10ந்தேதி வரை 3,839 புகார்கள் பெறப்பட்டுள்ளது, இவற்றுள் 57 புகார்கள் மட்டுமே நிலுவையில் உள்ளன. மீதமுள்ள புகார் அனைத்தும் ஏழு நாட்களுக்குள் சீர் செய்யப்பட்டு செயலியில் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று அறிவுறுத்தி னார்கள். அனைத்து கோட்ட பொறியாளர்களும், நம்ம சாலை செயலியில் எந்த புகாரும் வராத வண்ணம், அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

"பேட்ச் ஃப்ரீ சாலை" எனப்படும் பள்ளம் இல்லா சாலைகளை, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பொறியாளர்களின் தலையாய கடமையாகும். அதிலும் குறிப்பாக அடுத்த 3 மாதங்கள் பருவ மழைப்பெய்யும் மாதங்கள் ஆகும். எனவே, பொறியாளர்கள் சாலைப் பணியாளர்களை பயன்படுத்தி, தேவையான நடவடிக்கைகளை கவனத்துடன் மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும் என்று தெரிவித்தார்.

**'பாலங்கள் பராமரிப்பு' மாதம் கடைப்பிடிப்பு!**

காலநிலை மாற்றம் எனப்படும் "கிளைமேட் சேஞ்ச்" காரணமாக மழை வெள்ளம் ஏற்படுவது என்பது ஒவ்வொரு வருடமும் நடைபெறும் நிகழ்வாக உள்ளது. ஆகவே, பருவ மழையை சமாளிக்கும் விதமாக ஒவ்வொரு வருடமும், ஆகஸ்ட் மாதத்தை "பாலங்கள் பராமரிப்பு" மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

அனைத்து பாலங்களிலும் உள்ள நீர் வழிப்பாதைகள் சீர் செய்யப்பட வேண்டும், அதில் உள்ள சிறு செடிகள் போன்றவை அகற்றப்பட வேண்டும். வெள்ள நீர் வழிந்து ஓடும் விதமாக முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் அனைத்து மழைநீர் கால்வாய்களில் உள்ள கசடுகள்(சில்ட்) அகற்றப்பட்டு வெள்ள நீர் விரைவாக வழிந்து ஓட வழிவகை செய்யுமாறு அனைத்து பொறியாளர்களுக்கும் பல்வேறு ஆய்வு கூட்டங்களில் உரிய அறிவுரைகளை வழங்கி உள்ளதாக தெரிவித்த அமைச்சர் அவர்கள், வானிலை ஆராய்ச்சி நிலையம் இந்த வருடமும் பருவ மழை வழக்கமான அளவைவிட அதிகமாக மழை பெய்யும் என கணித்திருக்கிறது.

எனவே, இத்தருணத்தில் அனைத்து வெள்ளநீர் தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கைகளையும் அனைத்து கோட்ட பொறியாளர்களும் மேற்கொண்டிருக்க வேண்டும். அப்படி ஏதேனும் பணிகள் விடுப்பட்டிருந் தால் உடனடியாக பருவ மழை தொடங்குவதற்கு முன்னதாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ. சத்தியபிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் இதர தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இன்று மேனாள் குடியரசுத் தலைவர்

# டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் 95வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவிக்கின்றனர்!

**சென்னை, அக். 15 -**

**மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் 95வது பிறந்த நாளான இன்று (15.10.2025) மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.**



டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரத்தில் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக 15.10.1931 அன்று பிறந்தார்.

அவர் தம் பள்ளிப்படிப்பை இராமேஸ்வரம் நகரில் உள்ள ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் தொடங்கி, உயர் படிப்பை திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் சேர்ந்து இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் 1955ஆம் ஆண்டு "விண்வெளி பொறியியல் படிப்பை" தொடங்கி, பின்பு அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்று, அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்.

டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் மக்களுக்கான அரசின் திட்டங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் இடையே வேறுபாடின்றிச் சென்றடைய வேண்டும் என எண்ணினார். மேலும், குடிநீர், எரிசக்தி சமன் அடையப்பட வேண்டும், விவசாயம், தொழில், சேவை, ஒருங்கிணைந்த முன்னேற்றம், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுடன் சிறந்த கல்வி, தரமான மருத்துவ வசதி கிடைக்கப் பெற வேண்டும், வறுமை ஒழிக்கப்பட்டு கல்வி வசதிகளுடன் பெண்களும், குழந்தைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் 1960ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த இவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக் கோள் ஏவுதலில் முக்கியப் பங்காற்றினார்.

1980ஆம் ஆண்டு SLV III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகிணிI என்ற துணைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி ஒன்றிய அரசு இவருக்கு, 1981ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பத்ம பூஷண்" விருது, 1990ஆம் ஆண்டு "பத்ம விபூஷண்" விருது ஆகியவற்றை வழங்கிச் சிறப்பித்தது.

டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பிரமோஸ் ஏவுகணையை உருவாக்கினார். 1960ஆம் ஆண்டு இந்திய ராணுவத்திற்குத் தேவையான சிறிய ரக ஹெலிகாப்டரை வடிவமைத்துக் கொடுத்தார். SLV, SLV3, ரோகிணி1, செயற்கைக்கோள் ஏவுதல் ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றினார். மேலும், திரிசூல், அக்னி, பிருத்வி, நாக், ஆகாஷ் போன்ற ஏவுகணைகள் இவர் விண்வெளி ஆய்வுத் துறையின் திட்ட இயக்குநராக இருந்தபோது கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

1999 ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு. கால்கள் பழுது பட்டவர்களுக்கான எடை குறைந்த மாற்றுக் கால்கள் தயாரித்துக் கொடுத்தார். டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் இளைஞர்களை 'கனவு காணுங்கள்' என்று கூறினார். இதனால் கோடிக்கணக்கான இளைஞர்களின் மனதில் நீங்கா புகழோடு இடம் பிடித்தார்.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராக 2002 ஜூலை 25 அன்று பதவியேற்றார். குடியரசுத் தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பாரத ரத்னா விருதை" ஒன்றிய அரசு இவருக்கு வழங்கிப் பாராட்டியது.

"பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் என்ற பெருமையைப் பெற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர், "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

டாக்டர் ஏ. பி. ஜெ. அப்துல் கலாம் அவர்கள் "குழந்தைகளுக்குக் கனவு உண்டு, அந்தக் கனவை நனவாக்கும் லட்சியம் அந்தக் குழந்தைகளிடம் மிகுந்திருக்கும்" எனக் கூறினார். "அக்னிச் சிறகுகள், இந்தியா 2020, வெளிச்சப் பொறிகள், மிஷன் இந்தியா, திருப்பு முனைகள்: சவால்களுக்கு இடையே ஒரு பயணம், எனது பயணம், " உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்பட்ட டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் 2015 ஜூலை 27ஆம் நாள் இயற்கை எய்தினார்.

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அவரது திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தம் திருக்கரங்களால், 15.10.2023 அன்று திறந்து வைத்தார்கள்..

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் பிறந்த தினமான இன்று (அக்டோபர் 15ஆம் நாள்) அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, இந்தாண்டு நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்களுடன் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



வீட்டு வசதி துறை அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளருமான சு.முத்துசாமியின் சென்னை இல்லத்தில் சந்தித்து நாளை (16.10.2025) பிறந்தநாள் காணும் அவருக்கு ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் வாழ்த்துத் தெரிவித்தார்.